# ஞான தீபம்.

புத்தகம்—1. | 1893 ஞு பங்குனி மீ 1 உ | இலக்கம்—8.

ஞானதீபப் பத்திராதிபர் அறிவிக்கிறதாவது:— இலங்கையில் சகல சிறைசாலைகளிலு மிருக்கிற இஸ்லாமான மறியற்காரர்களுக்கு ஞானதீபப் பத்திரிகையை நாம் கிரய மெடுக்காமலும் கவர்ணமேன்றார் தபால் செலவெடுக்காமலும் அனுப்பி வருகிறோம். இந்த சலாக்கியத்திற்காக அரசாட்சியாருக்குத் துதிகூறுகிறோம். இந்தப் புத்திரிகையில் ஆலிம்சாகிபவர்களுக்கும் குருமார்களுக்கும் நடந்த சம்பாசனையை நிறுத்தி, சிறைச் சாலைகளிலுள்ளவர்களுக்குச் சில உபதேசங்களைச் சொல்லப்போகிறோம்.

சிறைச் சாலைகளில் தண்டிக்கப்பட்டவர்களில் மிகுதியானவர்கள் தங்கள் கோபத்துக் கிடங்கொடுத்ததாலும் சிலர் பொருளாசையை மீறவிட்டதாலும், சிலர் இச்சைக்குத் தங்கள் புத்தியைக்கீழ்ப்படுத்தி விட்டதாலும் தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். சிலர் தங்கள் சத்துருக்களின் துராலோசனையைக் கொண்டும் பொய்சாட்சிகளைக் கொண்டும் அநியாயமாய்த் தண்டிக்கப்படுவது முண்டு. அவர்க ளொவ்வொருவரும் இந்த திக்குறில் ஊன்றுதல் பிடித்துக் கொள்ளவேண்டும். அதாவது:—வலாஹவ்ல வலாக்கூவத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அளீம். ஒரு சியனு மொரு தத்துவமுமில்லை, வல்லமையுடைய அல்லாஃகுத்தாலாவைக் கொண்டேயல்லாது.

நிற்பாக்கியமான முஸ்லீங்களே! சிறைச்சாலையை துன்யாவில் நகரமென்று சொல்லலாம். ஆகிலும் உங்களுக்கு அதை சொர்க்கமாக்கிக் கொள்ளுதற்குங்கூடும். உலகத்தில் மனிதரால் பழிக்கப்படுகிறவர்களாய் மறியவீட்டில் புகுந்தவர்கள் வெளிவரும்போது அல்லாகுத்தாலாவுக்கு அன்பானவர்களாகவும் அவனிடததே உயர்த்தியான பதவியைப் பெற்றவர்களாகவும் வெளியே வரக்கூ

டும். உங்களின் ஹாலின் ஹக்கிக்கத்
தையும், வெளியே இருப்பவர்களின்
ஹாலின் ஹக்கீக்கத்தையும் நோட்டமி
ட்டுப்பார்த்தீர்களே யானால் நீங்கள் நல்
வழியின் பாதைக்குத் திரும்பும் வாசலி
ல்நிற்பதை விளங்கிக்கொள்வீர்கள். வெ
ளியே நிற்பவர்களில் அல்லாகுத்தாலா
வையும் ஆகிறத்தையும் மறவாமல் சாலி
ஹான அமல்களைச் செய்துவருகிற மூமி
ன்களைத்தவிர, மற்றவர்கள் அல்லாகு
த்தாலாவையும் மறந்து மவுத்தையும் ம
றந்து துன்யாவின் ஆசையில் சிக்கி, ஒவ்
வொரு நாளும்ஒவ்வொரு மணிநேரமும்
அல்லாகுத்தாலா விலக்கியவைகளைச்செ
ய்து ஏவியதைச்செய்யாமற் பாவங்கள்
மலைமலையாகக்குவித்துவருவதைச் சிந்தி
யுங்கள், அவைகளை நினைக்கவோ மீட்சி
பெறவோ இடமில்லாது ஆவலெ
ன்னும் சூறுவழிக்காற்று உருட்டி
கபுறைறயில் கதறிக்கதறி விழுவதைக்
கவனியுங்கள் அவர்களுக்குத் தங்கள்
ஹாலையுந் தங்கள் முடிவையும் அதற்கு
ப்பின்னுள்ள ஆல்களையும் நினைக்க நே
ரமில்லாமல் வெறிகொண்டவர்களாயிரு
ப்பதை நோட்டமிடுங்கள். நீங்களுமிந்த
நிலைபரத்திலிருந்து, இப்பொழுது உங்க
ள் களாப்படிமறியல் வீட்டுக்குள் வந்தி
ருக்கிறீர்கள். நீங்களிந்த வீட்டுவாசலு
க்குள் நுழைந்தவுடனே உங்களை மருட்
டி மோசம்செய்த பொருள்கள்யாவும் உ
ங்களைவிட்டு நீங்கிவிட்டன. உங்கள் ச
ரீரத்துக்கு இன்பமும் மனத்திற்குச் சந்
தோஷமுங் கொடுத்து உங்கள் மனத்
தைத்திருப்பிக்கொண் டிருந்தவைகளெ
ல்லா முங்களுக்குத் துலையாகிவிட்டன.
செய்த பாவங்களைச் சிந்திக்கவும்நீங்கள்
அல்லாகுத்தாலாவிடஞ்சலித்து மன்றா
டி மன்னிப்புக்கேட்கவுஞ் சாவகாசங்
கிடைத்து விட்டது.

உங்களுக்குக் கோபமுண்டாகக் கார
ணங்களுமில்லை, அதைச்செலுத்துதற்கு
ஒருவருமில்லை. மனிதர்களோ நேட்டா
ட்டமில்லாமையால் குரோதம், பொறா
மை, கோள், பொய் முதலிய தீயகுணங்
களுண்டாவதற் கிடமுமில்லை. நீங்களிப்
பொழுது நிற்கும் கீழ்மையான நிலைபர
த்தினால் உங்கள் அகங்காரம், பெருமை
புகழ்விரும்பல் முதலிய தீயகுணங்களு
ண்டாகக் கூடியதாயுமில்லை, விலக்கப்
பட்ட மட்டுக்கு மிஞ்சியபேச்சு, சிரிப்பு
வேடிக்கை முதலிய குணங்கள் வருதற்
குக் காரணங்களுமில்லை, சிற்றின்ப அ
னுபோகம், ஹறாமான செயல்கள் பொரு
ளாவல் முதலிய தீயகுணங்க ளுண்டாவ
தற்கு வழியுமில்லை அலங்காரமான உ
டை, இன்பமான தீனுசிய வைகளின்
தேட்டத்துக்கு இடமுமில்லை. பஞ்சேந்
திரியங்களின் தேட்டங்களையும் இன்பங்
களையும் இச்சிப்பதற்குக் கூடியதாயுமில்
லை. இந்தக் குணங்களை யெல்லாம் தெ
ண்டிப்பைக்கொண்டு அடக்கிக்கொள்
ளுதற்குப பெரியோர்கள் எவ்வளவு பிர
யாசமெடுத்திருக்கிறார்கள். உங்களின்
நிலைபரத்தால் அக்குணங்க ளெல்லாம்
நீங்குதற் கிடமாகி யிருக்கின்றது. அல்
லாகுத்தாலாவின் சதறுக்கமைந்து அவ
னின் ஆசையைக் கல்பிற்கொண்டு எவ்
வேளையும் அவனின் எண்ணமும் பிக்று
மாயிருந்தீர்களேயானால், உங்களுக் கு
ண்டாயிருக்கிற முசீபத்து றகுமத்தாகி

விடும். ஆகையால் நாம் உங்களுக்கு ச்சொல்லும் உபதேசமாவது:—

முதலாவது, உங்கள் அதிகாரிகளுடைய கட்டளைகளுக் கமைந்து, சட்டங்களுக்குக் கீழ்ப்பட்டு நடவுங்கள், அப்படி நடந்தால் சட்டப்படிச்குச் சில சிலாக்கியங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

இரண்டாவது, நீங்கள் செய்யும் வேலைகளுக்கும்அனுபவிக்கும்கஷ்டங்களுக்கும் மதைதை வருத்தப்படுத்திக்கொள்ளாமல், தைரியத்தோடு பொருந்திக்கொள்ளவேண்டும். உங்களுக்குச் சரீரமும் கல்பு மிருக்கின்றன, உங்கள் சரீரத்துக்கு அந்த அதிகாரிகள் அதிகாரஞ் செலுத்தக்கூடும். உங்கள் கல்புக்கு அதிகாரஞ் செலுத்தக்கூடாது. உங்கள் கல்பு அல்லாகுத்தாலாவின் திக்றிலும் பிக்றிலும் ஆசையிலும் வேலையாயிருக்கவும் உங்கள் சரீரம் அந்த அதிகாரிகள் ஏவும் வேலையா யிருக்கவுஞ் செய்து கொள்ளவேண்டும்.

மூன்றாவது, உங்களுக்குப் பராயமுண்டான நாள்முதல் அல்லாவையும் மவுத்தையும் ஆகிறத்தையும் நினைக்காமல் செய்த பாவங்களை நினைத்து விசனப்பட்டு அல்லாகுத்தாலாவிடம் நாயனே! உனக்கு மாறு செய்து விட்டேன். நீ எனக்குத் தந்த நிஉமத்துகளை யெல்லாம் மறந்து, உனக்கு விரோதஞ்செய்த பாவியாயிருக்கிறேன், நீ என்னை இந்த சிறைசாலைக் கனுப்பாதுபோனால் நான் துன்யாவின் மருட்டுதலில் மயங்கினவனாய் மவுத்தாகி, நீடூழிகாலம் அதாபுபடுவதற்காகும். இந்தச் சிறைசாலைக்கு வந்தவுடன் எனது மயக்கம் நீங்கி விட்டது, உறங்கினவன் விழித்ததுபோலாகிவிட்டேன், துன்யாவின் சீவியம் மிகவுஞ் சொற்பமென்றும், நாங்களெல்லோரும் சபருளியாயிருக்கிறோமென்றும் என் யக்கீனில் திட்டமாகிவிட்டது, எனக்குண்டாயிருக்கிற கஷ்டங்களால் என் மனஞ் சுத்தமாகவும் உன்னை மறவாதிருக்கவும் உதவி செய்தருள், எனது பாவங்களை மன்னித்தருள், என் மனத்தில் கெட்ட எண்ணங்கள் நாட்டங்களுண்டாகாதிருக்க என்னைக் காற்றுக்கொள், என்று எவ்வேளையும் துஆக் கேளுங்கள்.

நாலாவது, உங்கள் கல்பை அல்லாகுத்தாலாவுடைய திக்றிலும் பிக்றிலும் பராக்காக்கிக் கொள்ளுங்கள், நீங்கள் வேலைகளைச் செய்யும்பொழுதும் செய்யாதிருக்கும் பொழுதும் தனித்திருக்கும் பொழுதும் லாயிலாஹ இல்லல்லாகு என்கிற திக்றை விடாது பற்றிப் பிடித்துக் கொள்ளுஙகள், அதின் பொருளைக் கல்பிலும் வசனத்தை நாவிலுமாக்கிக்கொள்ளுங்கள், சொற்ப காலமிவ்விதம் திக்று செய்து வரும்பொழுது நாவால் சொல்லாத நேரத்தில் கல்பு அந்த திக்றைச்சொல்லுகிறதாகிவிடும். அபுல்ஹசனிஷ்ஷாதலீ றகுமகுல்லாகு சொல்லியிருககிறார்கள் ஒருவன் தன் நாவால் லாயிலாஹ இல்லல்லாகுவென்று விடாது சொல்லி அந்த திக்றின் பொருளும் இன்பமும் கல்புக் குண்டாகிவிட்டால் முன்செய்த பாவங்களாலுண்டாயிருந்த இருளென்கிற திரை

நீங்கிவிடும், அப்பொழுது அல்லா அ
ல்லாமல் வேறொன்றுமில்லை யென்ப
தைக் காண்பானென்று சொல்லியிருக்
கிறார்கள். உங்களுக்கு திக்று பலன்
கொடுக்கத் தொடங்குவதற்கு ஒரு அ
டையாளஞ் சொல்லுகிறோம், நீங்கள
திக்றை விடாது ஓயாமற் செய்துவந்து
சிலநேரம் மறந்தால் அல்லது வேறு
பராக்கிலிருந்தால் கல்பு துடிக்கும், ஒரு
குழந்தை பசியில் பதறுவதுபோல் பத
றும், உங்கள் இருதயம் காய்ந்து சுருங்
குவதுபோலிருக்கும், உடனேதிக்றைச்
சொன்னால் கல்பு குழிர்ந்து பூரித்து
மலர்ந்ததுபோலிருக்கும், இந்த அடை
யாளத்தை நீங்கள் கண்டு கொண்டால்
திக்றைப்பற்றிப் பிடித்துக் கொள்ளுங்
கள், உங்களைறையை இபாதத்துகாறை
வாக்கிக் கொள்ளுஙகள், அப்பொழுது
அல்லாகுத்தாலா நாடினால் மேலே
சொல்லிய நாயகமவர்கள்சொல்லியபடி
உஙகள் பாவத்தினால் லுண்டா யிருந்த
இருளென்கிற திரை நீங்கிவிடும், அப்
பொழுது உங்கள் அமலுக்கும் தெண்
டிப்புக்குந்தக்க பதவிகளைப் பெற்றுக்
கொள்வீர்கள்.

ஐந்தாவது. இல்மில்லாதவர்களாயிரு
ந்தால் ஞானதீபபத்திரிகையை முத
லாம் பத்திரிகை முதல் மிகவுங் கவன
மாய் வாசித்துவாருங்கள், அவைகளில்
ஆரிபீன்களுடைய பேச்சுகளை எழுதிவ
ருவதால் அவைகள் உங்களுக்கு மிகவு
ம் பிரயோசனங் கொடுக்கும்.

ஆறுவது, நீங்கள் எவ்வேளையும் உங்
களுக்குண்டாகிய கஷ்டங்கள் வருத்த
ங்கள் சகலதுகளும் சபூறாயிருந்துகொ
ள்ளவேண்டும், பெரியோர்கள் அவுலி
யாக்கள் நபிமார்கள் கஷ்டங்களையும்
வேதனைகளையும் சபூறுடனே அனுபவித்
திருப்பதை ஞாபகத்தில் வைத்துக்
கொள்ளுங்கள், எத்தனையோ பாக்ஷா
மார்கள் இராஜாக்கள் இமாம்கள் சிறை
சாலைகளில் வருத்தப்பட் டிருப்பதை
நினைத்துப்பாருங்கள், பொருள்களும் தி
ரவியங்களும் செல்வங்களும் மனிதரு
க்கு றகுமத்தாகவுமிருக்கும், லஉனத்
தாகவுமிருக்கும் பொருளைக் கொ
ண்டு நன்மைகளைச் செய்யக் கூ
டியதாயிருக்கும், பொருளைத்தந்த நாய
னுக்கு நன்றியுள்ளவனாய் நன்மைகளை
விளைவாய்ச் சேகரித்துக்கொண்டு மவு
த்தாகிறவனுக்கு அது றகுமத்தாயிருக்
கும், பொருளைக்கொண்டு மயங்கி பெ
ருமைகொண்டவனாகவும் அதை அதிக்
மாக்க வேண்டுமென்கிற ஆவல் கொ
ண்டவனாகவு மிருந்து மவுத்தானால்
பொருள அவனுக்கு லஉனத்தாயிருக்
கும். கஷ்டங்கள் முசீபத்துகளு மதி
போலவே, கஷ்டங்கள் வருத்தங்களு
ண்டான தருணத்தில் அவைகளுக்குப்
பொருந்தி யமைந்து நடக்கிறது வணக்
கங்களில் பெரிய வணக்கமா யிருக்கும்
அவைகளுக்கு சபூறுசெய்யாமல் மனத்
தை வேதனைப்படுத்திக் கொள்ளுகிற
தும் கவலைப்படுகிறதும் குரோதங்கொ
ள்ளுகிறதும் லஉனத்தாயிருக்கும், பெ
ரியோர்கள் தங்களுக்கு வருத்தங்களு
ண்டான நேரத்தில் மனமுவந்து பொ
ருந்தி அதைக்கொண்டு மேலானபதவி
களைப் பெற்றுக்கொண்டார்கள். நீங்
களும் அவர்களின் குணத்தைப்
பின்பற்றினால் மேலான பதவிகளைப்பெ
ற்றுக் கொள்வீர்கள், சபுறுவது மனி

தனுக்குத் தினதானது, மிருகங்களுக்
கும் மலாயிக்கத்துகளுக்கும் சபூறுக்
கிடமில்லை, மிருகங்களுக்கு அவைகளி
ன் தேட்டங்களை யடக்குதற்குத் தத்து
வமில்லை, மலாயிக்கத்துகளுக்கோ அல்
லாகுத்தாலாவின் சமூகத்தின் ஆசை
யும் அதின் ஆனந்தமுமே யல்லாது,
வேறு ஆசைகள் தேட்டங்களொன்றுமி
ல்லாத கிரப்பமான தன்மையி லிருக்கி
ருர்கள், ஆசை தேட்டம வருத்தமுத
லியவைகளில்லாததால் சபூறுக்கிடமில்
லை, மனிதனுக்கோ குழந்தைப் டாயத்
தில் மிருகங்களைப்போலவே தினுடை
ய தேட்ட மொன்றுமட்டுமிருக்கும், பி
ன்பு விளையாட்டின் விருப்பமும், பின்பு
பெண்ணாசை பொருளாசை முதலிய
ஆசைகளு முண்டாகி விடுகின்
றன, அல்லாகுத்தாலா இரண்டு மலாயி
க்கத்துகளைத் திட்டமாக்கியிருக்கிருன்
அதிலொரு மலாயிக்கத்து நேர்வழி
யைக் காட்டிவைக்கிறவராகவும் அல்
லாகுத்தாலாவை அறியவும் அவனு
டைய திருத்துதளை யறியவும், இந்த
சரீர இசைகளுக்கு இவ்வித மிடங்
கொடுப்பது நல்லது. இவ்விதமிடங்
கொடுப்பது மோசத்தை வருத்திவைக்
குமென்று அவன் கல்பில் உதிக்கச் செ
ய்துவருகிருர், இன்னுமொரு மலாயிக்
கத்தைத் திட்டப்படுத்தி யிருக்கிருன்,
அவர்கள் சரீர இச்சைகளை யொடுக்கவு
மவைகளைக்கீழ்ப்படுத்தவும் உதவியான
வர்களா யிருக்கிருர்கள், சைத்தானே
சரீர இச்சைகளை எழுப்பிவிடுகிறவனுயி
ருக்கிருன் நமது மார்க்கமோ இவைக
ளையெல்லாம் விபரித்துக்காட்டி சரீர
இச்சைகளுக்கும் தேட்டதுக்கும் இ
டங்கொடுக்கிறது, துன்யாவிலும் ஆகி
றத்திலும் கஷ்டத்தை யுண்டாக்குமெ
ன்பதையும் அவைகளைக்கீழ்ப்படுத்தும்
ஒழுங்குகளையும் அறிவித் திருப்பதாயி
ருக்கும். இவைகளை யறிந்து கல்பில்
உறுதிபடுத்திச் சரீர இச்சைகள் அல்லா
குத்தாலாவுடைய பாதைக்குச் சத்துரு
க்களென்று உறுதிகொள்வது ஈமானுயி
ருக்கும். நபிசல்லல்லாகு அலைகிவசல்
லம் சபுறுவது ஈமானிலரைவாசென்று
சொல்லியிருக்கிருர்கள். நோம்பாவது
வயற்றின் தேட்டத்தையும் பெண்ணு
சையையும் குறைக்க அப்பியாசப்படுத்
துதலாயிருக்கும், ஆகையால் நீங்கள்
சரீர தேட்டங்களை யொடுக்கி உங்கள்
கஷ்டங்களைச் சகித்து வருவீர்களேயா
னுல் அது அல்லாகுத்தாலாவுக்கு உவ
ப்பான இபாதத்தாகயிருக்கும். உங்க
ள் கஷ்டங்கள் நாளுக்குநாள் இலேசா
ய்த் தோன்றும், சுல்தான்கள் பாக்கிய
வான்கள் முதலியவாகள் தங்கள்மாளி
கைகளையும் செல்வங்களையும் தள்ளிவி
ட்டு காடு வனங்களில் தீனில்லாமலும
உடைகளில்லாமலும் உறக்கமில்லாம
லும் திரிந்து வருத்தங்களை யனுபவித்
திருக்கிருர்கள், அவர்கள் புத்திக்குறை
வானவர்களென்றும் நீங்கள் புத்திமான்
களென்றும நினைக்குறீர்களோ? அவர்க
ளோ அல்லாகுத்தாலாவையும துன்யா
வையும அறிந்தவர்கள். ஒருவன் அல்
லாகுத்தாலாவையறிந்தால் அவனுசை
யில் மூழ்கிவிடுவான், துன்யாவையறிந்
தானேயானுல் அதின் கெடுதியைவிட்
டுமே தப்பியோடாதிருக்கமாட்டான். ஆ
கையால் உங்களுக்கு அந்தப்பெரியோ
ர்களின் குணத்தையும் நடக்கைகளை

யும எடுத்துக்கொள்ள இடமுண்டாயி
ருக்கிறது, அவைகளைப் பற்றிப்பிடித்
துக்கொள்ளுங்கள்.

உங்கள் தாய்தந்தையர்களையும் பிள்
ளை குட்டிகளையும் சினேகிதர்களையும
விட்டுப்பிரிந்து அவர்களைக்காணாமலிரு
ப்பதும அவர்களோடேடாடக் கூடாதி
ருப்பது முங்களுக்கு விஷனத்தைக்
கொடுக்கிறதானால் அதற்கு நாம சொ
ல்லுகிறதாவது '—துன்யாவில் பிள்ளை
குட்டிகள் சினேகித்ர் முதலியவர்களு
டைய அன்பு மிகவு மிலேசானது, நீங்
கள் மவுத்தானால் உங்க ளருமையான
மனைவிமார் தனித்து உங்கள் மையித்
திருக்கிற விடத்திலிருக்க அஞ்சுவார்க
ள், கபுறிலடக்கிச் சொற்ப நாளைக்குள்
ளாக உங்களையல்லது உங்கள் ஹாலை
நினைப்பதற்கு ஒருவருமிராது, அவர்க
ளுக்காக தனக்கு வேண்டியவைகளைத்
தேடிக்கொள்ளாமல் தன் கபுசுக் கனி
யாயஞ்செய்கிறவனிலும் மதியீனன்வே
றுண்டா? இன்னும் துன்யாவில் மனி
தனுக்கு எத்தனையோ ஆபத்துகளுண்
டாகின்றன, திடுகூறுயொருவன்குருட
னாகிப் போகிறான் குஷ்டரோகங்களு
ண்டாகிச் சகிக்கக்கூடாத வேதனை யு
டையவனும் மனிதர்கள் அருவருக்க
ப்பட்ட வனுயுமிருக்கிறான், பைத்திய
முண்டாகி மிருகங்களிலும் கீழ்மையா
னநிலைபரத்திலாகிவிடுகிறான்,இவர்களு
டைய ஹால்களையு முங்களுடைய ஹா
ல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அல்
லாகுத்தாலாவைப் புகழ்ந்து நாயனே
இப்படிப்பட்ட பாலாய்களைவிட்டு மெ
ங்களைக் காப்பாற்றி வைத்தவனே உன
க்கே புகழென்று சொல்லவேண்டிய
தாயிருக்கும், இவைகளெல்லாவற்றிலு
ம் பெரிய ஆபத்தாயிருக்கும் துன்யாவி
ன் பராக்கிலும் மருட்டுதலிலுமிருக்கு
ம்தருணத்தில் திடுகூறாய்மவுத்துவந்து
தான் ஆவலாய் தேடிப் பேணுதலாய்
வைத்திருந்த பொருள்கள் யாவுக்கும்
இவ்விதஞ் செய்யுங்களென்று ஒருசொ
ல்லாவது சொல்ல விடமில்லாமலும் த
னக்கு அன்பாயிருந்த வர்களோடு ஒரு
பேச்சாவது பேசக்கிடைக்காமலும் அ
ல்லாகுத்தாலாவும் றசூலும் மனிதனே!
உனக்கு மவுதது வரும், கபுரின் அதாபு
வரும், மகுஷறுவரும் கேள்விகணக்கு
ண்டும், நரகமுண்டுமென்று சொல்லிய
வைகளையெல்லாம் உண்மையென்பதை
மவுத்தென்னும் திரை நீக்கிக்காட்டின
உடனே அவனுடைய ஹால் அந்தஹா
லையும்உங்களுடையஹாலையும்நினைத்து
ப்பாருங்கள், அல்லாகுத்தலாஉங்களுக்
கு ஹயாத்தைநீழமாக்கிநீங்கள் மவுத்து
க்குஆயத்தமாயிருக்க விடந்தந்ததற்கா
ய்அவனைப்புகழுங்கள், உங்களுக்குமதி
யல்வீட்டில் அறிவுசொல்லித்தரஉலமா
க்களில்லாததால் நாமொரு அறிவைச்
சொல்லித்தருகிறோம் அது உங்களுக்
குப் போதுமாயிருக்கும். நபிசல்லாகு
அலைகிவசல்லம் மவுத்து உனக்குப் போ
துமான உபதேசி என்று சொல்லியிருக்
கிறார்கள்.

மனிதரில் துன்யாவின் ஆசையில்மூழ்
கியிருப்பவர்கள் மவுத்தை நினைக்கும்
பொழுது அதைப் பொருத்தக் கேடா
கவும் வெறுப்பாகவும் நினைப்பது மல்

லாமல், அது அவனுக்கு வருமென்ப
தை மனத்திலுண்டி நினைக்காமல் வே
றுபராக்குகள் மேலிடச்செய்துவிடுவா
கள், இரண்டாவது பாவத்தை நினைத்
து விஷனப்படுகிறவர்கள் மவுத்தைய
திகமா நினைப்பார்கள், அதைக்கொண்
டு கல்பில் அச்சமுண்டாகவும் தவ்பா
வில் தரிபாடாயிருப்பதற்கும் நினைப்பா
ர்கள் ஆகிலும் அவர்களும் ஒரு மட்டுக்
கு மவுத்தைவெறுப்பார்கள். அதுஅவர்
கள் தவ்பாவைக்கொண்டு மன்னிப்புப்
பெற்று, ஆகிறத்துக்குத் தேவையா
ன அமல்களைச்செய்து கொள்ளுமுன் ம
வுத்து தங்களைக் கொண்டுபோய் விடு
மோ வென்கிற அச்சத்தைக் கொண்
டே, மவுத்தாவது அல்லாகுத்தாலா
வைச் சந்திக்கிறதாயிருக்கும். கபிசல்
வல்லாகு அலைகிவசல்லம் அல்லாகுத்
தாலாவின் சந்திப்பை வெறுக்கிறவன்
அல்லாலவை வெறுக்கிறவனுயிருக்குமெ
ன்று சொல்லியிருக்கிறார்கள். ஆனவி
வர்களோ அல்லாகுத்தாலாவின் சந்தி
ப்பை வெறுக்கிறவர்களல்ல, அல்லாகு
த்தாலாவின் சந்திப்புக்காகத் தேவை
யான ஆயத்தங்களிற் குறைவுகள்வந்து
விடுமோவென்று அஞ்சி, அந்த ஆயத்த
ங்களிற் சாக்கிரதயா யிருப்பவர்கள் மூ
ன்றாவது ஆரிபீன்கள், இவர்களாகிற
வர்கள் மவுத்தை என்னேரமும் நினை
த்தவர்களாக தங்களுடைய ஹபீபைப்
ச் சந்திக்கும் காலம் எப்பொழுது வரு
மென்றும், இந்தப்பாவமும் கெடுதியு
முள்ள விடத்தைவிட்டு நீங்குவது நல
மென்றும் வழிபார்த்திருப்பவர்கள். ஒவ்
வொரு இரவும் உங்கள் அறைக்குப்
போனபொழுது உங்கள் மவுத்தை நி
னையுங்கள், எவ்வளவு இராஜாக்கள் இ
ரவியவான்கள் சுத்தவீரர்கள் உங்களை
ப்போல் மவுத்தை நினைக்காமலும்அதற்
குவெகு காலமிருக்கின்றதென்று நினை
த்துமிருக்கையில் அவர்களுக்குத திடு
கூறாய் மவுத்துவந்ததையும், அவர்கள்
சரீரங்கள் புழுக்களுக்கும் மண்ணுக்கு
மிரையானதையும, அவர்கள் மனைவி
மார்கள் கைம்பெண்களானதையும, பி
ள்ளைகள் அனாதிரர்களானதையும். அவ
ர்கள் பொருள்களெல்லாம் அழிந்துபோ
னதையும், அவர்கள் பெயர்கள் அடை
யாளங்கள் முழுவதும் அற்றுப்போன
தையம் சிந்தியுங்கள், இப்பொழுது
பூமியின் முதுகிலிருப்பவர்கள் எல்
லோரும் சிலகாலத்திலுள்ளே அவர்க
ளைப்போலவே இவ்வுலகத்தை விட்டு
மறைந்து யாதொரு அடையாளமுமில்
லாது அற்றுப்போவார்களென்பதையும்
வேறு கவும்களும் சனங்களுமிந்த ஆல
த்தில் இந்த விதமே மவுத்தை மறந்தவ
ர்களாயும் துன்யாவைச்சதமென்று நி
னைத்தவர்களாயு மிருப்பார்களென்ப
தையும் பிக்றிடுங்கள். உங்களுடைய
சக்றாத்தையும் உங்கள் றூகு வெளியா
னவுடனே உங்கள சரீரத்தின் நிலைபர
த்தையும் ஒடுக்கமான தனித்த இருட்ட
றையில் வைத்து மண்ணைப்போட்டு மூ
டிவிட்டுப் போய்விடுவதையும் முன்கர்
நக்கீர் வருவதையும் கபுறின் அதாபுக
ளையும் கியாமத்தின் பயங்கரங்களையும்
நரகத்தின் அதாபுகளையும் ஒருவனொ
ரு ஊருக்கு பயணம்போக நினைக்கும்
பொழுது அல்லது கப்பலேறும்பொழு
து அந்தக் கப்டலிலுள்ள வருத்தங்களை
யும் பயணத்திலுள்ள சவுக்கியம் துன்ப
ம் சகதையும் நினைப்பதுபோல் நினைத்
து, அந்த மவுத்து வந்தவுடனே பதறா
மலும் மயங்காமலும் ஆரிபீன்களைப்
போல எங்கள் ஹபீபைச் சந்திக்கும
காலம் வந்துவிட்டது, இந்தக்கெடுதி
யான துன்யாவைவிட்டு மீட்சி யடையு
ம நாள் வந்துவிட்டதென்று சந்தோஷ
த்துடனே மவுத்தைச் சந்திப்பதற்கு
ஆயத்தமாகிக் கொள்ளுங்கள்.

ஏழாவது, உங்களுக்கிப்பொழுது ஏவப்படுகிற வேலைகளை வருத்தமென்றும், தஞ்சவுக்கியமில்லையென்றும் உடை போதாதென்றும் நீங்கள் நினைக்கிறதானால் அதற்குச் சொல்லுகிறோம், இந்த சிறைச்சாலையின் வருத்தத்தைச் சகிக்க கூடாதவர்கள் நரகத்தை எவ்வளவு பயப்படவேண்டும். நரகமும் நெருப்பு அங்கு தீனும நெருப்பு, உடையும் நெருப்பு, அதிலுள்ள பயங்கரமான பாம்புகளையும் தேள்களையும் அதாபுகளையும் நினைத்தாலெவ்வளவு பயப்படவேண்டும், ஆனாலுங்கள் வருத்தம உங்களுக்கு நலவை யுண்டாக்கும், பெரியோர்கள் பாவஞ்செய்த உறுப்புகளுக்கு வேதனை செயவார்கள் பசிதேட்டத்தால் ஹறாமான தீன் ஒருவாயுணவு தின்பட்டால் வற்றைப் பசியில்வைத்து விடுவார்கள் கண்ணாலொரு ஹறாமான பார்வையைப்பார்த்தால் கண்ணைப் பழுதாக்கிவிடுவார்கள். மன்சூறிபுனு இபுறாகிமவர்கள் ஒரு ஆபீது, ஒரு பெண்ணோடுபேசிக்கொண்டிருந்து அவள் துடையைக் கையால் பிடித்தானென்றும உடனே தான் செய்த பாவத்தை நினைத்து தவ்பாச்செய்து தன் கையை நெருப்பிலிட்டு வேகுமவரையுஞ் சுட்டானென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். பனீ இஸறாயீலி லொரு பெரியோர்கள் வெகுகாலமாக ஒரு தவச்சாலையில் வணக்கஞ்செய்துகொண்டிருந்து ஒரு காளொருபெண் வெளியே நிற்பதைக்கண்டு மோகித்து அவளை நெருங்கக் காலைவைத்து வெளியேவந்தவுடனே அவர் கல்பில் நான் என்ன வேலை செய்யப்போகிறேனென்று பயமுண்டாகி தவ்பாச்செய்து திருமப அந்த அறைக்குட்செல்ல நாடினபொழுது சொன்னார், காலே! நீ இந்த பாவத்தைச்செய்யவெளியேவந்தால் நீ அந்த அறைக்குட்செல்லத்தகாதென்சொல்லி, அந்த அறையையடைத்துவெளியே மழையிலும வெயிலிலும் பனியிலும் நின்று அவர் சரீரத்தை வெகுகாலம் வரையும வேதனைப்படுத்தினார். கஸ்வான் றகுமகுல்லாகு ஒரு குகையில் வணக்கஞ் செய்துகொண்டிருந்தார்கள், ஒரு நாள் வெளியே நின்ற ஒரு பெண்ணின் பேரில் பார்வை விழுந்தவுடனே கண்ணிலறைந்து கொண்டார்கள். கண் பழுதாகி விட்டது. தமீமுத்தாரி என்கிற பெரியோர்கள் ஒரு நாள் தஹஜ்ஜுதுக்கு எழும்பாமல் உறங்கி விட்டார்கள், அதற்காக ஒரு வருடம் வரையிலும உறங்காமலிருந்து சரீரத்தை வருத்தபபடுத்தி யிருக்கிறார்கள். இவ்விதம் பெரியோர்கள் தங்கள் சரீரத்திற்கு சொற்ப குற்றங்களுக்காக கடும் ஆக்கினை கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் செய்த குற்றங்களையும்பாவங்களையும் நினைத்துப்பார்த்தால் இப்போ துங்கள் சரீரத்துக் குண்டாயிருக்கிற வருத்தம் போதுமென்று நினைப்பீர்களா?

ஆகையால் எனது உடறபிறப்பாகிய முஸ்லிம்களே! நாமெழுதியதைக் கவனமாய் வாசித்து மனத்திற்கெடுங்கள், உங்களை அமிழத்திக்கொண்டிருந்த துன்யா உங்களை விட்டு நீங்கியிருக்கிறது உங்கள் மனம்போல நடக்கக் கூடாமலிருப்பதே உங்களுக்கு நலவாயிருக்கிறது, உங்கள் கல்பை அல்லாவுக்கு ஒப்புக்கொடுத்து விட்டீர்களே யானால் நீங்கள் உலகத்தை வெறுத்த சுஹதாக்களின் நிலைபுரத்துக் காகுதற்கிடமாயிருக்கும், அல்லாகுத்தாலாவையும் மவுத்தையும் ஆகிறத்தையும் மறவாமல் திக்றும் பிக்றுமா யிருப்பவர்களின் பதவிகளைப் பெறுதற்கும் வழியுண்டாயிருக்கும். அல்லாகுத்தாலா உங்கள் கல்புக்குப் பொறுதியையும் அவனின் தரிசனையைப் பெற்றுக்கொள்ளும் மஹிம்மத்தையும் தந்து சாலிஹீன்கள் கூட்டத்திற் சேர்ப்பானாக ஆமீன்.